(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO.276/2020

**Depostitions of PW- 6 Witness for**

| | |
|---|---|
| Name | திரு. கருத்தப்பாண்டி, சார்பு ஆய்வாளர் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 0th day of April 2024.

Signature of Witness.

04.04.2024

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னை மாநகரம் ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.11.2019 ம் தேதி திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் நிலையப்பொறுப்பில் இருந்தபோது 25.11.2019 ம்தேதி 12.00 மணிக்கு பொற்செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அந்த புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 549/2019 பிரிவு–379 இதச வாக வழக்கு பதிவுசெய்துள்ளார். பின்னர் சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் எனது பார்வைக்கு வைத்து நானும் அதை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே

13.00 மணிக்கு சம்பவஇடம் சென்று சாட்சிகள் வெள்ளைச்சாமி, முனியம்மாள் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பின்னர் சாட்சிகள் பொற்செல்வி, ஐசக்ராஜதுரை, வெள்ளைச்சாமி, முனியம்மாள், சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வா க்குமூலம் பதிவுசெய்தேன். விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின்எதிரியை தேடிவந்தநிலையில் 26.11.2019ம் தேதி காலை 10.00 மணியளவில் திருவில்லிபுத்தூர் கனரா வங்கி அருகில் நின்றுகொண்டிருந்த எதிரியை சந்தேகத்தின் பேரில் விசாரித்ததில் மேற்படி திருட்டுசம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்ததால் அந்த இடத்தில் 10.10 மணிக்கு கைதிற்கான காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது சாட்சிகள் தமிழரசன், ஆஞ்சே ஆகியோர்களின் முன்னிலையில் எதிரி தாணாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மணிமாலா அவருடைய மணிபர்சில் இருந்து எடுத்து ஆஜர் செய்த 1 கிராம் எடையுள்ள ஹார்டீன்மாடல் டாலருடன் கூடிய 2 பவுன் தங்க முறுக்கு செயின்–1 எடுத்து ஆஜர் செய்ததை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் மூன்றுவழக்குகள் சம்மந்தப்பட்டசொத்துகளை சிவகாசி சென்று அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர் 15.00 மணிக்கு எதிரி மற்றும் சொத்துகளுடன் நிலையம் வந்து பெண்காவலர்கள் மூலம் திரேக பரிசோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்படைத்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் வகுத்த கட்டளைகளை பின்பற்றி தக்க வழிக்காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தை படிவம் –91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். ஒப்புதல்வாக்குமூல சாட்சிகளான தமிழரசன், ஆஞ்சே ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். புகார்தாரரான பொற்செல்வி என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவு –379 இதச

வாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். வரைபடம் அ.சா. ஆ. 6 ஆகவும், படிவம் –91 அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

புகார் கொடுத்த மறுநாளே புகார்தாரரிடம் நகையை ஒப்படைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில்தான் நகை ஒப்படைக்கப்பட்டது. புகார்தாரர் புகார் கொடுக்கும்போது நகைக்கான இரசீது அல்லது வேறு ஆவணங்கள் கொடுத்தாரா என்றால் இல்லை. கனரா வங்கி முன்பு எதிரியை 10.00 மணிக்கு கைது செய்தேன். முதலில் கைது செய்தேனா என்றால் விசாரித்தபோது சம்பவம் உண்மையென தெரியவந்ததால் கைது செய்தேன். கைதுசெய்த பின்பு நான் எதிரியை பரிசோதனை செய்தேனா என்றால் பெண் காவலர் முன்னிலையில் விசாரித்தேன். வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. எதிரியை சுமார் ஒரு மணி நேரம் விசாரித்தேன். நகையை அத்தாட்சியில் 11.30 மணிக்கு கைப்பற்றினேன். அத்தாட்சியில் நகை கைப்பற்றப்பட்டபின்புதான் சிவகாசிக்கு சென்றேனா என்றால் ஆமாம். எந்த வண்டியில் போனோம் என்றால் ஒரே காரில் போனோம். சிவகாசியில் முதலில் எந்த வழக்கில் அத்தாட்சி தயார்செய்தேன் என்றால் குற்றஎண். 137/2019 வழக்கில் தயார் செய்தேன். அந்த வழக்கின் நகை யாரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்றால் மகாலட்சுமி என்பவரிடம் இருந்து கைப்பபற்றப்பட்டது. மகாலட்சுமி வீடு எங்கு உள்ளதென்றால் சிவகாசி சத்தியாநகர் அனுப்பன்குளத்தில் உள்ளது. மகாலட்சுமி வீட்டிற்கு போகும் போது அங்கு யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் மகாலட்சுமி இருந்தார். அவரது கணவர் சற்று நேரத்தில் அங்கு வந்தார். மகாலட்சுமியின்வீட்டில் இருந்துதான் பொ ருளை எடுத்து என்னிடம் ஒப்படைத்தார்களா என்றால் ஆமாம். அதன் பிறகு தான் அத்தாட்சி அந்த வழக்கில் தயார்செய்யப்பட்டது. இந்த வழக்கில் கனரா வங்கி திருவில்லிபுத்தூர் அங்கு வைத்தே அத்தாட்சி தயார் செய்யப்பட்டது. மகாலட்சுமியின் கணவரை விசாரித்து அத்தாட்சியில் கையெழுத்து வாங்கினேனா என்றால் அவர் விசாரணைக்கு ஒத்துழைக்காமல் சென்றுவிட்டார். மகாலட்சுமியை அந்த வழக்கில் சாட்சியாக விசாரித்தேனா

என்றால் விசாரித்தேன். மகாலட்சுமியிடம் இருந்து நகையை வாங்கிவிட்டு இந்த வழக்கின் விசாரணையை முடித்துவிட்டேனா என்றால் இல்லை. மகாலட்சுமியிடம் விசாரணை செய்த பிறகு வேறு வழக்குசம்மந்தமாக வேறு யாரையும் விசாரித்தேனா என்றால் விசாரணை செய்தேன். குற்றஎண். 138/2019 வழக்கு சம்மந்தமாக சண்முகலட்சுமி என்பவரை விசாரித்து அத்தாட்சியில் அந்த வழக்கு சொத்தை கைப்பற்றினேன். அதன் பின்னர் மற்றொரு வழக்கு சம்மந்தமாக மகாலட்சுமி, மணிமாலா ஆகியோர்களை விசாரித்து அந்த வழக்கு சொத்தை அத்தாட்சியில் கைப்பற்றினேன். சண்முகலட்சுமியிடம் அவரது வீட்டில் வைத்துதான் அந்த வழக்கு சம்மந்தப்பட்ட நகையை கைப்பற்றினேன். சண்முகலட்சுமி வீட்டு நபர்கள் யாரிடமும் அந்த வழக்கு அத்தாட்சியில் கையெழுத்து வாங்கினேனா என்றால் இல்லை. மணிபர்ஸ் அத்தாட்சியில் கைப்பற்றினேனா என்றால் இல்லை. நகையை மட்டும் தான் கைப்பற்றினேன். புகார்மனுவில் தனது கட்டைபையில் வைத்திருந்த நகையை யாரோ எடுத்து சென்றுவிட்டதாக தான் சொல்லப்பட்டுள்ளதென்றால் மணிபர்ஸ் காணாமல் போனது என்றும் அதில் ஒரு செயின் வைத்திருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கிற்கு முன்பு எதிரி பற்றிய விவரம் எனக்கு தெரியாதென்றால் சரிதான். அவரை யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் நான் தான் சந்தேகத்தின் பேரில் போலீஸ் பார்டிகளுடன் விசாரித்தேன். நான் சொன்ன நாள் நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு எண்ணிக்கைக்காக போடப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.